2013 ஏப்ரல் 1]

பார்வையோடு, எதிர்கால சமுதாயம் ஏற்றம் பெற, அனைத்துத் துறைகளிலும் தமிழகம் முன்னிலை பெற, ஓய்வின்றி, உறக்கமின்றி உழைக்கும் நாளைய இந்தியாவின் விடியல் மாண்புமிகு அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) பொற்பாதம் பணிந்து வணங்கி, ஏழையெளிய தாய்மார்களுக்கு விலையில்லா ஆடுகள், கறவை மாடுகளை வழங்கி, அவற்றைப் பராமரிப்பதற்காக துறையூர் தொகுதிக்குட்பட்ட நாகம்மநாயக்கன்பட்டியில், கால்நடைக் கிளை நிலையம் அமைத்துக் கொடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 115, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

115—

ஜவுளிப் பூங்கா

***17435—திரு. ஆர்.பி. உதயகுமார்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தூர் தொகுதி, ராஜபாளையம் ஒன்றியத்தில ஜவுளிப் பூங்கா அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சாத்தூர் தொகுதி, ராஜபாளையம் ஒன்றியத்தில் கைத்தறி ஜவுளிப் பூங்கா அமைக்க தற்போது அரசிடம் செயற்குறிப்பு இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வையகத்தில் தர்மத்தைக் காப்பாற்றி, மக்களை வாழ வைத்திட, நல்ல மனிதர்களைப் படைத்து வருகின்றார் இறைவன். அப்படி இறைவனால் படைக்கப்பெற்ற நல்ல மனிதர்களால் தர்மத்தை முழுமையாக நிலைநாட்டிட முடியாத நிலை வருகின்றபோது, இறைவனே மனித உருவில் அவதாரம் எடுத்து, தர்மத்தைக் காத்து, மக்களை வாழ வைப்பார் என்ற தெய்வ மொழிக்கு உயிர் வடிவமாய், இங்கே அன்னை தமிழகத்தில் மனித உருவில் அவதாரம் எடுத்து, தர்மத்தைக் காத்து, மக்களை நலமோடு வாழ வைத்து, வரலாறு படைத்து வருகின்ற, தாய் உருவில் வாழும் மனித தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனித பொற்பாதங்களை பணிந்து வணங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

கைத்தறி மற்றும் விசைத்தறி தொழிலாளர்களுக்கு உதவுகின்ற வகையிலே, 2013–2014 ஆம் ஆண்டில் 1.72 கோடி வேஷ்டிகளும், 1.73 கோடி சேலைகளும், 362.8 கோடி ரூபாயிலே கொள்முதல் செய்ததோடு, கைத்தறித் தொழிலைச் சீரமைத்து, புத்துயிரூட்டி, மேம்படுத்துவதற்கான திட்டத்திற்காக 97.83 கோடி ரூபாய் அனுமதி அளித்ததோடு, கைத்தறி தள்ளுபடி மானியத்திற்காக 78.45 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கின்ற, கைத்தறித் தொழிலாளர்களுடைய குடும்பத்தில் ஒளி விளக்கு ஏற்றி வைத்திருக்கின்ற, இந்தியத் திருநாட்டின் திருவிளக்காம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய புனித ஆட்சியிலே, விருதுநகர் மாவட்டம், சாத்தூர் தொகுதிக்குட்பட்ட, ராஜபாளையம், சத்திரப்பட்டி, சங்கரபாண்டியபுரம், சம்சியாபுரம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளிலே வசிக்கின்ற மக்களின் பிரதானத் தொழிலாக கைத்தறித் தொழில் இருந்து வருவதால், சாத்தூர் தொகுதிக்குட்பட்ட, ராஜபாளையம் ஒன்றியத்தில் ஜவுளிப் பூங்கா ஒன்றை அமைத்து, அப்பகுதிவாழ் மக்களுக்குப் பொருளாதார ஊக்கமும், ஆக்கமும் அளித்திட அன்போடு வேண்டுகிறேன். மேலும், அப்பகுதியில் 15 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இச்சங்கங்களில் ஏறத்தாழ 4,134 பேர் உறுப்பினர்களாக இருக்கின்றார்கள்; 4,134 உறுப்பினர்களுடைய குடும்பங்களும் இந்தத் தொழிலை நம்பி இருக்கின்ற காரணத்தால், நவீன தொழில்நுட்ப முறையிலே இந்தத் தொழிலை மேம்படுத்திட, ஜவுளிப் பூங்கா ஒன்றை அமைத்துக் கொடுத்தால், அந்தப்

2013 ஏப்ரல் 1]

பகுதிவாழ் மக்களுடைய வாழ்வாதாரம் உயர்வாக அமையும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் தர்மத்தைக் காப்பாற்றுகின்ற தலைசிறந்த தலைவியாக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பது நாடறிந்த உண்மை என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். ஜவுளித் துறையில் வேலைவாய்ப்பை அதிகரித்து, ஜவுளி ஏற்றுமதியைப் பெருக்கும்பொருட்டு, சர்வதேசத் தரத்துடன்கூடிய, உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் வகையில், மத்திய அரசும், மாநில அரசும் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காவை அமைக்கும் திட்டத்தினை நடைமுறைப்படுத்தி வருகின்றன. இத்திட்டத்தின்கீழ், தமிழகத்தில் இதுவரை 10 ஜவுளிப் பூங்காக்கள் அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றது. அப்பூங்காக்களில் ஜவுளித் தொழில் சார்ந்த நூற்பு, சாயம் ஏற்றுதல், துணி பதனிடுதல், உயர் தொழில்நுட்ப நெசவு, பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடை உற்பத்தி போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது நடைமுறையிலுள்ள ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்கும் திட்ட வழிமுறைப்படி, அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன்தான் ஜவுளிப் பூங்கா அமைக்க இயலும். இத்திட்டத்தின்கீழ் ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கான மொத்தத் திட்டத் தொகையில், மத்திய அரசு 40 விழுக்காடு மானியமும், மாநில அரசு 9 விழுக்காடு அல்லது ரூபாய் 9 கோடிக்கு மிகாமல் மானியமும் வழங்குகின்றது. எனவே, சாத்தூர் தொகுதிக்குட்பட்ட, ராஜபாளையம் ஒன்றியத்தில் ஜவுளிப் பூங்கா அமைக்க அப்பகுதியிலுள்ள தொழில் முனைவோர் முன்வருவார்களேயானால், அரசின் உதவியுடன் அப்பகுதியில் ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

மேலும், விருதுநகர் மாவட்டம், சாத்தூர் பகுதியில், 14 பிரைமரி சொசைட்டிகளும், 1 இன்டஸ்ட்ரியல் சொசைட்டியும், ஆக மொத்தம் 15 சொசைட்டிகள் இருக்கின்றன; 4,137 நெசவாளர்கள்

இருக்கின்றார்கள். இங்கே இருக்கின்ற நெசவாளர்கள் இலவச வேஷ்டி, சேலை திட்டத்திற்கும் மற்றும் சீருடைத் திட்டத்திற்காக டிரில் போன்றவை தயாரிக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இன்றையதினம் இந்த ஜவுளிப் பூங்கா அமைப்பதன் நோக்கமே புதிய டிசைன்களை உருவாக்கி மார்க்கெட்டில் போட்டி போடுகின்ற வகையில் தமிழக மக்களை உருவாக்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட திட்டம். ஆகவே, அந்தப் பகுதியில் தொழில்முனைவோர் முன்வந்தால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தூர் தொகுதி, ராஜபாளையம் ஒன்றியத்திலே ஜவுளிப் பூங்கா அமைத்துத் தர பரிசீலனை செய்யப்படும் என்று அறிவித்திருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கு சாத்தூர் தொகுதி மக்களின் சார்பாக கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்து அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 116, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

116—

சொந்தக் கட்டடம்

***5899—திரு. ஆர். சீனிவாசன்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதி, ஆற்காடு சார்–பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?